ௐ

தகைசார் பேராசிரியர், இலக்கிய கலாநிதி

# கலாநிதி. பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்கள் அவர்களின் வாழ்வும், சம்ஸ்கிருதமொழி ஆளுமைகளும்




ஆசிரியர்

பிரம்மஸ்ரீ ச. பத்மநாபன்



வெளியீடு

**ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம்**

முன்னேஸ்வரம்

சிலாபம்

12.05.2018

ௐ

தகைசார் பேராசிரியர், இலக்கிய கலாநிதி,

# கலாநிதி, பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்கள்

அவர்களின்

# வாழ்வும், சம்ஸ்கிருதமொழி ஆளுமைகளும்


ஆசிரியர்

**பிரம்மஸ்ரீ ச. பத்மநாபன்**

தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர்,

சம்ஸ்கிருதத்துறை,

கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



வெளியீடு

**ஸ்ரீமுன்னேஸ்வரம் தேவஸ்தானம்**

முன்னேஸ்வரம்

சிலாபம்.

12.05.2018

## நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தகைசார் பேராசிரியர், இலக்கிய கலாநிதி, கலாநிதி, பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்கள் அவர்களின் வாழ்வும் சம்ஸ்கிருதமொழி ஆளுமைகளும் |
| ஆசிரியர் | : | பிரம்மஸ்ரீ ச. பத்மநாபன் B.A.(Hons), P.G.Dip in Edu., M.Phil-Sanskrit |
| முதலாம் பதிப்பு | : | 2018.05.12 |
| வெளியீடு | : | ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம் முன்னேஸ்வரம், சிலாபம். |
| வடிவமைப்பு | : | சிவஸ்ரீ மு. சசிதரக்குருக்கள், நாயன்மார்கட்டு. |
| அச்சுப்பதிப்பு | : | மதி கலர்ஸ், முருகேசர் ஒழுங்கை, நல்லூர். |
| பக்கங்கள் | : | 70+vi |
| அளவு | : | B5 |
| ISBN | : | 978-955-0877-58-4 |

# முன்னுரை

எமது குருநாதர் தகைசார் பேராசிரியர், இலக்கிய கலாநிதி, கலாநிதி, பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்கள் அவர்களின் வாழ்வும், சம்ஸ்கிருதமொழி ஆளுமைகளும் எனும் பொருளில் அரிய ஆவணங்களை உள்ளடக்கிய நூலாக இந்நூல் வெளியிடப்படுகின்றது.

பேராசிரியர் குருக்கள் அவர்களது ஒன்றாகத்தொகுக்கப்பட்டு பகுப்புச் செய்யப்பட்ட மிகச் சுருக்கமான வாழ்க்கை வரலாறு இடம்பெறுகின்றது. இத்துடன் இணைந்ததாக எமது குருநாதரது சம்ஸ்கிருதமொழி ஆக்கங்களாக விளங்கும் ஸ்ரீவடிவாம்பிகா பஞ்சரத்தினம், கன்யாகுமாரி பஞ்சரத்தினம், குரு பஞ்சரத்தினம் எனும் மூன்று பஞ்சரத்தினங்களும் இடம்பெறுகின்றன. இப்பஞ்சரத்தினங்கள் 1970களில் இயற்றப்பட்டவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் குருக்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதிய ஸ்தோத்திரங்கள், பிரகடனங்கள், கடிதங்கள் என்பவைகளுள் கிடைக்கப்பெற்றவை அதேவடிவத்தில் நவீன தொழில்நுட்ப உதவியுடன் ஆவணமாக பாதுகாக்கப்பட வேண்டிய எண்ணத்துடன் பதிப்பிக்கப்படுகின்றது. இத்துடன் இணைந்ததாக வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரிகளினால் பேராசிரியர் குருக்கள் அவர்களுக்கு எழுதிய கடிதங்கள் இடம்பெறுகின்றன. இதற்கு மேலாக பல்வேறு சந்தர்ப்பங்களில் பேராசிரியர் குருக்கள் அவர்களுக்கு பலரும் எழுதிய சம்ஸ்கிருத மொழியிலமைந்த பாராட்டுப் பத்திரங்களும் இடம்பெறுகின்றன.

பேராசிரியர் குருக்கள் தமது குருநாதர் வியாகரண சிரோன்மணி பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரிகளுக்கு சமர்ப்பணம் செய்த குரு ஸ்தோத்திரம் தமிழ் மொழியுடன் இடம்பெறுகின்றது.

இந்நூலினை கணனி வடிவத்தில் அமைத்துத்தந்த நாயன்மார்கட்டு குருமணி குருகுலத்தை சேர்ந்த சிவஸ்ரீ மு. சசிதரக்குருக்கள் அவர்களுக்கும் நூலினைச் சிறந்த முறையில் பதிப்பித்துத்தந்த மதி கலர்ஸ் பதிப்பகத்தினருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள் உரித்தாகுக.

அரிய ஆவணங்களைப் பாதுகாக்கும் எண்ணத்துடன் எமது குருநாதரது அரிய பொக்கிஷமாக விளங்கும் இவ் ஆவணங்கள் அடங்கிய நூலினை திரிகரண சுத்தியுடன் ஸ்ரீவடிவாம்பிகா சமேத ஸ்ரீமுன்னைநாதசுவாமியின் திருவடிகளில் சமர்ப்பணம் செய்கின்றோம்.

***


பிரதமகுருவும், தர்மகர்த்தாவும்
ஸ்ரீமுன்னேஸ்வர தேவஸ்தானம்,
முன்னேஸ்வரம்,
சிலாபம்.

**பிரம்மஸ்ரீ ச. பத்மநாபன்**
தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர்,
சம்ஸ்கிருதத்துறை,
கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.